UNIVERSITY OF JAFFNA
LIBRARY
PERIODICAL DIVISION

2012 அக்டோபர்
அணி 08 படை 09
நன்கொடை ரூபா 20.00

# செஞ்சக்தி

மக்கள் விடுதலை முன்னணியின் உத்தியோகபூர்வ செய்தித்தாள் செய்தி பத்திரிகையாக பதிவுசெய்யப்பட்டது




இலவச கல்வியை அழித்தொழிக்கும் நடவடிக்கையை உடன் நிறுத்தி தேசிய உற்பத்தியில் கல்விக்கு 6வீத விழுக்காடு நிதி ஒதுக்கீடு செய்து கல்வித்துறையை சீர்படுத்துமாறு அரசாங்கத்தை வலியுறுத்தி பல்கலைகழக பேராசிரியர்கள்,மாணவர்கள், தொழிற்சங்கங்கள், புத்திஜீவிகள், அரசியல்வாதிகள் கண்டியிலிருந்து கொழும்பு நோக்கி ஆரம்பித்த பாதயாத்திரையில் மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் தோழர் சோமவன்ச அமரசிங்க, பாராளுமன்ற உறுப்பினர் தோழர் அநுரகுமார திசாநாயக்க, சோஷலிஸ மாணவர் சங்கத்தின் தேசிய அமைப்பாளர் தோழர் நலிந்த ஜயதிஸ்ஸ, சோஷலிஸ மகளிர் சங்கத்தின் தேசிய அமைப்பாளர் சமன்மலி குணசிங்க, இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பிரதான செயலாளர் தோழர் மஹிந்த ஜயசிங்க உட்பட பல ஆயிரக்கணக்கானோர் பாதயாத்திரையில் அணிவகுத்து வருவதையே படத்தில் காண்கின்றீர்கள்.


# முதலைக் கண்ணீர் வடிக்கும் இந்திய அரசு!

கடந்த காலங்களில் தமிழ் மக்களின் பிரச்சினைகளை தீர்ப்பதற்கு இலங்கை அரசை வற்புறுத்துவதாக காட்டிக்கொண்டு நாளுக்கு நாள் எமது பிரச்சினைகளை மேலும் மேலும் சிக்கலடையச் செய்து தமது பொருளாதார நோக்கங்களையும்; அரசியல் நோக்கங்களையும் பூர்த்திசெய்து கொண்ட இந்தியா மீண்டும் ஒரு முறை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுடன் பல்வேறு இணக்கப்பாடுகளுக்கு வந்துள்ளதாக தெரியவருகிறது.

எமது நாட்டு உற்பத்தி வீழ்ச்சியடைவதற்கு நாளுக்கு நாள் தொழில் வாய்ப்பு பிரச்சினை; விலைவாசி பிரச்சினை அதிகரித்து வரும் சூழ்நிலையில் எமது நாட்டு பொருளாதாரத் துறையை சரித்து விடும் பல்வேறு பொருளாதார உடன்பாடுகளுக்காக அண்மையில் இந்தியாவுக்கு விஜயமொன'றை மேற்கொண்ட ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவும் இந்திய அரசும் உடன்பட்டுள்ளது. மறுபுறம் அனைத்து இன மக்களிடையே தேசிய ஒற்றுமையை கட்டியெழுப்பி சமத்துவத்தின் அடிப்படையில் உரிமைகளை வழங்கி நாம் அன்றாடம் முகம் கொடுக்கும் பிரச்சினைகளை தீர்த்து; ஜனநாயக உரிமைகளை வழங்கி எமது நாட்டு தேசிய பிரச்சினையை தீர்ப்பதற்கு பதிலாக 1987ம் ஆண்டு இந்தியாவால் பலவந்தமாக எம்மீது சுமத்தப்பட்ட போலி தீர்வு திட்டம் வடக்கு; கிழக்கு மக்களுக்கு எவ்விதமான பயன்பாடும் கிடைக்கவில்லை மறுபுறம் இந்நாட்டு தலைவர்களுக்கும் சில அரசியல் வாதிகளுக்கும் இந்திய முதலாளித்துவ அரசியல் தலைவர்களுக்கும் 13வது சீர்திருத்தத்தினூடாக தமது குறுகிய அரசியல் நோக்கங்களை பூர்த்தி செய்து கொள்வதற்காக இருசாராரும் இது தொடர்பாக இணக்கம் செய்து கொண்டுள்ளதாகவும் தெரியவருகிறது. வடபகுதியில் சிவில் நிர்வாகத்தை உறுதிபடுத்தி; முகாம்களில் வாழும் மக்களை உரிய வகையில் சகல வசதிகளுடன் மீளக்குடியமர்த்துவது; தொழில் வாய்ப்புகள் வழங்குவது; வாழ்க்கை தரத்தை உயர்த்துவது; ஜனநாயக உரிமைகளை வழங்குவது போன்றவற்றை மறந்து தமது அரசியல் காய் நகர்வுகளில் மட்டும் செயல்படும் இந்தியா மற்றும் எமது நாட்டு ஆட்சியாளர்களை நம்புவதால் தமது பிரச்சினைகள் இன்னும் அதிகரிக்கச் செய்யும் என அரசியல் விமர்சகர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

உள்ளே..

**ஆசியாவின் ஆச்சரியம்**



**பக்கம் 04**

தோட்டத் தொழிலாளர்களுக்கு மாதச்சம்பளம் வழங்க வேண்டும்




**பக்கம் 05**

**இந்த மண்ணில் மனித உரிமைகளை பாதுகாப்பதற்கு, உண்மையாகவே தேசிய ஒற்றுமையை கட்யெழுப்புவதற்கான செயற்பாடுகளை முன்னெடுத்தாக வேண்டும்**



தோழர் விஜிதஹேரத்

**பக்கம் 06**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மக்கள் போராட்டத்திற்கு ஜே.வி.பி எப்போதும் தலைமை தாங்கும்!




பல்வேறு நோக்கங்களுக்காக அரசாங்கத்திற்கு வாக்களித்த; மற்றும் வாக்களிக்காத மக்களுக்கு தமது தேவைகளை பூர்த்திசெய்து கொள்வதற்கும்; உரிமைகளை பாதுகாத்துக்கொள்வதற்கும் வீதியிலிரங்கி போராட வேண்டிய நிர்பந்தத்திற்கு தள்ளப்பட்டுள்ளனர்; இவ்வாறான போராட்டங்களுக்கு தலைமை வகிக்க மக்கள் விடுதலை முன்னணி எப்போதும் தயாராகவுள்ளது என மக்கள் விடுதலை முன்னணியின் பிரதானச் செயலாளர் தோழர் ரில்வின் சில்வா தெரிவித்தார்.

கடந்த 09ம் திகதி மக்கள் விடுதலை முன்னணியின் பிரதான காரியாளத்தில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டின் போதே இவர் இவ்வாறு தெரிவித்தார்.

நாட்டின் ஜனாதிபதியும் அமைச்சர்களும் உறுப்பினர்களும் மற்றும் அரச பலம்; பிரதேச சபைகளின் அதிகாரம்; அரச ஊடகங்கள் உட்பட பெரும்பாலான ஊடகங்களின் பலத்தை பயன்படுத்தி; தீப்பெட்டியிலிருந்து தண்ணி மோட்டார்கள்; தகரங்கள் வரையும் பல்வேறு லஞ்சங்களை மக்களுக்கு வழங்கியே அரசு கிழக்கு; வடமத்திய மற்றும் சப்பரகமுவ மாகாண சபைகளை வெற்றிகொண்டது. இத் தேர்தல் அனைத்து கட்சிகளுக்கும் சம வாய்ப்புகளை வழங்கி நடாத்திய தேர்தல் அல்ல. அரசு தேர்தல்களை வெற்றிகொண்டனர் மக்களுக்கு ஆனதால் என்ன நன்மைகள் கிடைக்க போகின்றது. வரலாற்றில் நடந்ததை போன்று இத்தேர்தல்களுக்கு பின்பும் புதிதாக எவ்வித சலுகைகளும் கிடைக்கப்போவதில்லை. சலுகைகளுக்கு பதிலாக கல்வித்துறை சுகாதாரத்துறை உட்பட பல்வேறு சேவைகள் துண்டிப்பு தொடர்ந்தும் நடைபெறப் போகின்றது; விலைவாசி உயர்ந்து கொண்டு செல்லும்; பல்வேறு கஷ்டங்களுக்கு மக்களுக்கு முகம் கொடுக்க வேண்டி வரும்; மக்கள் பணத்தை வீண்விரயம் செய்வதும் களவாடுவதும் பல மடங்கு அதிகரித்துச் செல்லும் தேர்தலில் வெற்றி பெற்றவர்கள் அமைச்சர்கள் மக்கள் பணத்தை செலவிட்டு தமது உரவினர்களுக்கு நண்பர்களுக்கு பல்வேறு விருந்து உபசரிப்புகள் உதவிகள் செய்த வண்ணமுள்ளனர்.

தேர்தல் காலகட்டத்தில் வழங்கப்பட்ட மண்வெட்டிகள்; தகரங்கள் நாளை தினத்திலிருந்து துருபிடிக்க ஆரம்பித்து விடும். இவற்றுக்கிடையே அழிந்து சென்ற தமது விவசாய உற்பத்திகளுக்கு நிவாரணம் கோரி நடாத்தும் போராட்டங்கள் உக்கிரம் அடையும்; பல்கலைக்கழக பேராசியர்களின் போராட்டம் தொடர்ந்தும் செல்கின்றது; அரசு பாடசாலைகள் இழுத்துமூடுவதற்கு எதிரான போராட்டங்கள் தொடர்கின்றது;இப்போராட்டங்களுக்கு தலைமை தாங்க எமக்கு இந்த தேர்தல் பெருபேறுகள் தடையாக இருக்காது. தேர்தல்களில் போட்டியிடுவது எமது பயணத்தின் ஒரு கட்டமாகும் எனவே மக்கள் விடுதலை முன்னணியென்பது தேர்தலையே நம்பி அரசியல் செய்யும் ஓர் கட்சியல்ல. அவ்வாறே தேர்தல்கள் மத்தியில் முடங்கியிருக்கும் கட்சியுமல்ல. எவ்வாறான இடையூறுகள் வந்தாளும் இந்நாட்டு சிங்கள; தமிழ்; முஸ்லிம் மக்களின் உரிமைகளை வென்றுகொடுப்பதற்காக தேர்தல்களை பயன்படுத்துவது எமது குறிக்கோளாகும் என தோழர் ரில்வின் சில்வா இங்கு கருத்து தெரிவித்தார்.

இச் செய்தியாளர் மாநாட்டின் போது மக்கள் விடுதலை முன்னணியின் பிரச்சாரச் செயலாளர் தோழர் விஜித ஹேரத் அரசியற் குழு அங்கத்தவர் தோழர் அநுர திசாநாயக ஆகியோரும் கலந்து கொண்டனர்.

## கல்வித்துறையின் நெருக்கடி குறித்து நடத்தும் கருத்தரங்கு பெரும் வரவேற்பு!



கல்வித் துறையின் நெருக்கடி குறித்து "கல்வித்துறையின் நெருக்கடியும் சிறுவர்களின் எதிர்காலமும்" என்ற தொணிப்பொருளில் மக்கள் விடுதலை முன்னணியினால் ஏற்பாடு செய்யப்பட்ட கருத்தரங்கு நாடலாவிய மட்டத்தில் மிகவும் வெற்றிகரமாக நடாத்தி செல்லப்படுகின்றது. தற்போதைய அரசு கல்வித் துறையைக்கு செலுத்தும் மக்கள் விரோத நடவடிக்கைகள் தொடர்பாக மக்களை அறிவுருத்தப்படுகின்றது.

## சோஷலிச வெற்றிகளை மக்களுக்கு வழங்கும் அரிய முன்னுதாரணம் வியட்நாம்!

67வது வியட்நாம் தேசிய நினைவு தினத்தை முன்னிட்டு இலங்கை-வியட்நாம் நட்புறவு மன்றத்தினால் கடந்த 19ம் திகதி மக்கள் விடுதலை முன்னணி தலைவர் சோமன்ச அமரசிங்காவினால் ஆற்றிய சொறபொழிவின் ஓர் பகுதியை இங்கு பிரசுரிக்கிறோம்.

நாம் அனைவரும் இங்கு கூடியிருப்பது சோஷலிச வியட்நானமின் 67வது தெசிய தினத்தை நினைவு கூறுவதற்காகும். 1945 செப்டெம்பர் 02ம் திகதி வியட்நாம் கம்யூனிஸ்ட் கட்சியின் சிரேஷ்ட தலைவர் "தோழர் ஹோ சி மின்" வியட்நாம் விடுதலையை பிரகடனப்படுத்தினார். பிரான்ஸ் காலனித்துவவாதிகளுக்கும் அமெரிக்க ஏகாதிபத்தியத்துக்கும் எதிராக நீண்ட காலமாக .துணிச்சலுடன் போராடி பெற்ற வெற்றியின் பின்பே இவ்வாறு பிரகடனப்படுத்தினார்.

அமெரிக்க ஏகாதிபத்தியம் தென் வியட்நாமை கைப்பற்றி அங்கு ஓர் பொம்மையாட்சியை நிலைநாட்டி வரலாற்றில் மிகக் கொடூரமான யுத்தத்தை ஆரம்பிக்கப்பட்டது. ஆசிய கண்டத்தில் மிகச் சிறியதேதார் நாட்டுக்கு எதிராக அமெரிக்கா மிகப் பயங்கரமான யுத்தத்தை கட்டவிழ்த்து விடப்பட்டது. தொண் கணக்கான குண்டுகளை வியட்நாம் மக்களுக்கு எதிராக வீழ்த்தப்பட்டது. ஆயிரக்கணக்கான மக்களை கொண்றொழித்ததோடு தடைசெய்யப்பட்ட ஏஜென்ட் ஒரென்ஜ் உட்பட தடைசெய்யப்பட்ட நச்சு வாய்வுகளை கூட இவ் யுத்தத்தின் போது பயன்படுத்தி அமெரிக்காவின் கொடூரத்தை காட்டியது.

37வருடங்களுக்கு பின்பும் இந் நச்சு வாய்வுகளின் விளைவுகள் வியட்நாம் மக்களை பிறப்பிலேயே அங்கவீனர்களாக்கி வருகின்றது. லட்சக் கணக்கான இவ் அங்கவீனர்களுக்கு எமது உதவி கண்டிப்பாக தேவைப்படுகிறதென்று நம்புகிறோம். எனவே மக்கள் விடுதலை முன்னணி சர்வதேச நட்புறவ கொள்கையிலிருந்து இவர்களுக்கு உதவி செய்வதற்கு தயாராகவுள்ளது. இவ் அங்கவீனர்களுக்கு உதவுங்கள் என இலங்கை வாழ் மக்களிடம் நாம் கோரி நிற்கிறோம். அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் "ஏஜென்ட் ஒரேன்ஜ்" தாக்குதலால் பாதிக்கப்பட்ட வியட்நாம் மக்கள் தொடர்பாக இலங்கையிலும் சர்வதேச மட்டத்திலும் மக்களை அறிவூட்டுவதற்கு முன்வரும்படி வைத்திய துறையிலுள்ள அனைத்து நிபுணர்களுக்கும் அழைப்பு விடுகிறோம்.

ஏகாதிபத்தியத்தின் பாரிய யுத்தத்திற்கு எதிராக வியட்நாம் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமைத்துவத்தின் கீழ் போராடிய வீரமிக்க மக்களை அமெரிக்காவால் தோற்கடிக்க முடியவில்லை. 1965ல் ஆரம்பக்கப்பட்ட மக்கள் விடுதலை முன்னணி வியட்நாம் மக்களின் நெருங்கிய நண்பராகும். எமது கட்சியின் ஸ்தாபகர் தோழர் ரோகண விஜேவீர அமெரிக்க ஏகாதிபத்தியத்திய யுத்தவாதிகளுக்கு எதிராக 1971ம் ஆண்டுவரை பல்வேறு கண்டன நடவடிக்கைகளுக்கு தலைமை தாங்கி வந்தார். 1975 மே 01ம் திகதி வியட்நாம் விடுதலைப் போராளிகள் அன்று "சயிகொன்" என்றழைக்கப்பட்ட "ஹோ சி மின்" நகரத்தை கைப்பற்றி முழு வியட்நாமையும் விடுதலையாக்கிக் கொண்டனர். இந்த இன்பகரமான நிகழ்வை உலகளவில் குறிப்பாக அமெரிக்காவின் அமைதியான முற்போக்காளர்களை மகிழ்வூட்டியது. நாமும் அக்காலகட்டத்தில் இலங்கையில் நிலவிய "ராணியின் ஆட்சிக்கு" எதிராக போராடியதால் சிறையிலடைக்கப்பட்டோம். அன்று சிறையிலிருந்த எமக்கு 1975 மே 01ம் திகதி மிகவும் மகிழ்வூட்டிய தினமாகியது. அன்றைய தினம் நாம் வியட்நாம் வீரமிக்க மக்களுடனும் உலகளவில் அமைதியான முற்போக்காளர்களுடன் கைகோர்த்து கொண்டோம்.

வியட்நாமை விடுதலை செய்துகொண்ட நாளிலிருந்து அந்நாட்டு மக்கள் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமையின் கீழ் தமது நாட்டை துரித கதியில் கட்டியெழுப்பத் தொடங்கினர். சோஷலிச வியட்நாம் கடந்த 37 வருடகாலத்தினுல் பொருளாதார, அரசியல், சமுதாய, கலாச்சார ரீதியில் பாரிய வெற்றிகளை கைப்பற்றியுள்ளதை எமக்கு காணமுடிகின்றது.

இன்று அரிசி ஏற்றுமதியில் உலகில் இரண்டாவது இடத்தில் வியட்நாம் காணப்படுகின்றது. மீன் உற்பத்தியை 30 மெட்ரிக் தொன்னாக உயர்த்தப்பட்டுள்ளது. அடுத்த வருடம் கோப்பி உற்பத்தியில் பிரேசில் நாட்டையும் தாண்டிச்சென்று கோப்பி உற்பத்தியில் உலகில் முதலாம் இடத்தை கைப்பற்றவுள்ளது.

வியட்நாமில் "டொய்-மொய்" திட்டத்தை அமுல்படுத்திய பின் தேசிய உற்பத்தித்துறை 8.4% த்தால் உயந்துள்ளது. 1993ம் ஆண்டு சனத்தொகையில் 58% வறுமையில் மூழ்கியிருந்தனர் ஆனால் 2009ல் அத்தொகையை 12% மாக குறைக்கப்பட்டுள்ளது. இதேபோன்ற பல்வேறு வெற்றியுடன் சோஷலிச வியட்நாம் இன்று முன்னேரி வருகின்றது.

சோஷலிசத்தின் கீழ் ஒரு நாடு பெற்று கொள்ளும் அரிய வெற்றிகளுக்கு வியட்நாம் ஓர் அரிய முன்னுதாரமாகும். இது இலங்கை மக்களுக்கும் பாரிய படிப்பினைகளை காட்டிவருகின்றது. எதிரி எவ்வளவு பெரிதாகத் தோண்றினாலும் ஓர் குறிக்கோளுடன் இயங்கும் மக்களுக்கு அதனை தோற்கடிக்க முடியும் என்பதை வீரமிக்க வியட்நாம் மக்கள் உலகத்திற்கு பறைசாட்டியுள்ளது.

சோஷலிச வியட்நாம் நீடூழி வாழ்க!
சிரேஷ்ட தலைவர் ஹோ சி மின் நாமம் நீடூழி வாழ்க!
இலங்கை - வியட்நாம் நட்புறவு நீடூழி வாழ்க!
சர்வதேசியவாதம் நீடூழி வாழ்க!
வியட்நாம் கம்யூனிஸ்ட் கட்சிக்கும் வியட்நாம் மக்களுக்கும் எமது மனமார்ந்த வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செஞ்சக்தி

மக்கள் விடுதலை முன்னணியின் உத்தியோகபூர்வ செய்தித்தாள்
464/20 பன்னிபிட்டடிவீதி பெலவத்த,பத்தரமுல்ல,இலங்கை
011-2785545, 0112785612
E-mail sensackthynews@gmail.com


## தர்மமும் விளையாட்டும்

பிரச்சினையை மூடிமறைத்தல், பிரச்சினைகளைத் தவிர்த்தல், அதிலிருந்து ஒதுங்குதல். இவைகள் முதலாளித்துவ அரசியல் ஆட்சியின் ஒரு கலையாகும் . முதலாளித்துவ ஆட்சியாளர்களும் முதலாளித்துவ முறையும் பிரச்சினைகளை கையாள்வதும் கலையின் ஒரு வடிவமாகும்.

கேட்பதை தவிர்த்து கேட்காததை கொடுப்பதும், பல்வேறு களியாட்டங்களை நிகழ்த்தி பிரச்சினையை தவிர்க்கும் பொருட்டு முதலாளித்துவ அரசியல் நாடகமானது, அபூர்வமான அரசியல் கலை, மற்றும் நடிப்பானது இப்போது ராஜபக்ஸ அரசாங்கத்தை கேள்விக்குட்படுத்தி வருகிறது. விளையாட்டில் (மெட்ச்) வென்றதன் பின்னர் பொருட்களின் விலைகளை அதிகரித்தல், அதிகரிப்பதற்கு முன்னர் விளையாட்டை (மெட்சை) காண்பித்தல் இது நமது நாட்டு மக்கள் ராஜபக்ஸ அரசாங்கத்தின் கீழ் அனுபவித்து வரும் நிலமைகளாகும்.

தேர்தல் அண்மிக்கும்போது ஒரு தடவை அம்பாந்தோட்டை துறைமுகத்திற்கு கப்பலொன்றை அனுப்பும். அல்லது அதில் கார்களை அனுப்பி மறுபடியும் பாதைவழியாக கொழும்புக்கு அனுப்பிவைக்கும்.

மறுதடவை மன்னாரில் பெற்றோலியம் கண்டு பிடித்துள்ளதாக கூறும். இம்முறைத் தேர்தலில் புதிய விளையாட்டான புத்தரின் புனித தந்தத்தை காட்சிப்படுத்தியதாகும் அது தேர்தல் நடைபெற்ற பிரதேச்ங்களிலேயே காட்சிப்படுத்தப்பட்டது. அதை பார்க்கச் சென்ற மக்கள் சாது, சாது என நாமமிட்டனர்.

அதேவேளையில் மாணவர்கள் வீதியில், தொழிலாளர்கள் வீதியில், விவசாயிகள் வீதியில் பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் வீதியில், பட்டதாரிகள், பெண்கள் என தமது தாம் முகம் கொடுக்கும் பிரச்சினைகளுக்கு தீர்வை தேடி போராடும்போது. ராஜபக்ஸ அரசாங்கம் அவைகளுக்கு ஆணைக்குழு அமைக்கிறது. விசாரணை நடத்துகிறது. ஆனால் குற்றவாளிகளுக்கு தண்டனை கிடையாது.

அண்மித்த உதாரணம் பல்கலைக்கழக விரிவுரையாளரின் பிரச்சினைக்கு 8 முன்மொழிவுகள் அடங்கிய கெபினட் பத்திரமொன்றை கொண்டு வருவதற்கு முயற்சித்தமையாகும். அதில் உள்ளடக்கப்பட்டடிருப்பவை தமது பிரச்சினைக்குத் தீர்வாக அமைப்போவதில்லையென பல்கலைக்கழக ஆசிரியர்கள் தெரிவிக்கின்றனர். அதனால் தொடர்ந்தும் போராடப்போவதாக அவர்கள் கூறுகின்றனர்.

தொழிலாளர்கள் தமது சம்பளத்தை அதிகரிக்கும்படி கேட்கும்போது ராஜபக்ஸ அரசாங்கம் அவர்கள் கேட்காத தேர்தலை கொடுக்கிறது. அப்படி பெற்றுக்கொடுத்து விட்டு தான் பூரணமான ஜனநாயகத்தைப் பெற்றுக் கொடுத்துள்ளதாகவும் ஜனநாயகத்தை பாதுகாப்பதாகவும் ஜனாதிபதி கூறுகிறார்.

ஆகவே அவருக்கு நாம் இப்படித் தெரிவிப்போம். முடியுமானால் இ.போ.ச ஊழியர்களுக்கு உரிய நாளுக்கு அல்ல அதற்கு முன்னர் அவர்களுக்கு சம்பளத்தை பெற்றுக் கொடுக்கும்படி, தற்போது நாடு முழுவதிலும் மக்கள் பல்வேறு பிரச்சினைகளை எதிர்கொண்டுள்ளனர். அதற்காக மக்கள் தமது உரிமைகளைக் கேட்டு வீதியில் போராடுகின்றனர். இவைகள் அனைத்தும் அரசாங்கத்திற்கு செவிடன் காதில் ஊதிய சங்காகும்.

வடக்கில் இன்று மீள்குடியேற்றப்பட்ட மக்கள் செல்லொனாத் துயரங்களை அனுபவித்து வருகின்னர். அண்மையில் மெனிக் பாம் இடைத்தங்கள் முகாம் மூடப்பட்டு அதிலிருந்து 300 க்கும் அதிகமான குடுபங்கள் முல்லலைத்தீவுக்கு கொண்டுச்சென்று நடுகாட்டில் விடப்பட்டுள்ளனர். அவர்களுக்கு எதுவிதமான வசதிகளும் செய்துகொடுக்கப்படவில்லை. அவர்களது காணி இராணுவத்தினரால் அபகரிக்கப்பட்டுள்ளது. அதற்கு சிறந்த உதாரணமாக கேப்பாபிலவு கிராமத்து மக்களின் இன்றைய நிலை சான்று பகிர்கிறது.

ஆம் மக்களின் பிரச்சினைகள் மூடிமறைக்கப்பட்டு அரசாங்கம் மக்களுக்கு தண்ணி காட்டுகிறது. அதாவது புனித புத்திரின் பெயரால் புனித தந்தத்தை காட்டி அரசாங்கம் மக்களோடும், மக்களது பிரச்சினைகளோடும் விளையாடுகிறது. புனித தந்தத்ததை காட்டுவதற்கு நாம் எதிரானவர்கள் அல்ல. ஆனால் அதை காட்டி மக்களது பிரச்சினைகள் மூடிமறைக்கப்படுமானால், மக்களது உரிமைகள் பறிக்கப்படுமானால், மக்களது காணிகளை அபகரிக்க்ப்படுமானால், அத்தோடு மக்கள் மீது அடக்குமுறையை கட்டவிழ்த்துவிடப்படுமானால் அதையே நாம் எதிர்க்கின்றோம்.

எனவே நாம் இந்நாட்டு மக்களுக்கு சொல்லுவதும் அதற்கு சமமான கதையேயாகும். ராஜபக்ஸ ஜனாதிபதியை சரியாக கண்டுகொள்ள வேண்டுமானால் அவர் செல்லும் பாதையை காண்ணுற்றுப் பாருங்கள். அவரது சொல்லையும் செயலையும் ஒப்பிட்டுப் பாருங்கள். அவர் மக்களுக்கு காட்டும் தர்மத்தை பாருங்கள் அவை தர்மமா? அதர்மமா என்பதை பாருங்கள். அவர் காட்டும் களியாட்டத்தை கண்டு ஏமாறாதீர்கள். அவர் மக்களிடம் போடும் விளையாட்டை சரியாக கண்டு கொள்ளுங்கள். அதுவே எமது மீட்சிக்கான வழியாகும்.

## கல்விச் சீரழிப்புக்கு எதிரான பேராசிரியர்களின் போராட்டத்திற்கு ஆதரவாக ஏனைய சிவில் மற்றும் புத்திஜீவிகள் அரசியல் தலைவர்கள் வீதியில் இறங்கி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.




இலவசக் கல்வியை பாதுகாப்பதற்கான பேரணியில் பேராசிரியர் தம்பர அமில தேரர்





பேரணியில் மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர்கள்




பேரணியில் கலந்து கொண்ட ஏனைய சிவில் அமைப்புகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசியாவின் ஆச்சரியம்



கல்வித்தொடர்பில் ஒருவர் காண்பிக்கின்ற அர்ப்பணிப்பு அவரின் கற்றல் மற்றும் அறிவை பயன்படுத்தும் விதம் மற்றும் எதிர்கால வெற்றி ஆகியவற்றினை தீர்மானிப்பது இந்த நாட்டின் கல்வி மட்டமாகும். ஆனால் அது தொடர்பில் ஆட்சியாளர் காண்பிக்கின்ற அர்ப்பணிப்பு அந்நாட்டின் எதிர்கால அபிவிருத்தி திசையை தீர்மானிப்பவையாகும். அதேபோல ஒருவரின் சுகாதார சுபாவம் அவரின் ஆரோக்கியத்தை பாதுகாத்தல் அதேபோல இந்த நாட்டின் ஆட்சியாளர் நாட்டின் சௌபாக்கியத்திற்காக கொண்டிருக்கின்ற அர்ப்பணிப்பு அந்நாட்டு மக்களின் சௌக்கியத்தை பாதுகாப்பற்றதாக அல்லது பாதுகாப்பனதாக தீர்மானிக்கும். அதனடிப்படையில் பார்க்கும் போது 64 வருடங்களாக எமது நாட்டை ஆட்சிசெய்த ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் ஸ்ரீலங்கா சுத்திர கட்சி உள்ளிட்ட அரசாங்கங்கள் இந்த நாட்டு மக்களை எந்தளவு பாரிய அனர்த்தத்திற்கு இழுத்துசென்றுள்ளது என்பதை சிந்தித்து பார்ப்பது அவ்வள்விற்கு வருத்தமான ஒன்றல்ல.

முதலாளித்துவ ஆட்சியாளர் எச்சந்தர்ப்பத்திலும் மக்களுக்கு கல்வியை பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்காது, மக்களுக்கு கல்வியை கொடுக்காது, அதிலிருந்து விரட்டியடிப்பதற்கே நடவடிக்கை எடுப்பர் என்று பிரான்ஸ் இனத்தை சேர்ந்த லொய்ஸ் பிரேலி தெரிவித்துள்ளார். கற்றோருக்கு பதிலளிப்பதற்கு ஆட்சியாளரும் கற்றறிந்திருக்க வேண்டும். எமது நாட்டின் தற்போதைய மஹிந்த ராஜபக்ஸ ஆட்சியை பார்க்கின்ற போது லொய்ஸ் பிரேலின் கூற்று எவ்வளவுக்கு யதார்த்தமானது என்பதனை சிந்தித்து பார்ப்பது அவ்வளவிற்கு கஸ்டமாக இல்லை. கொஞ்சம் சிந்தித்து பார்க்கையில் நாட்டின் முதல் பிரஜையாக கிராமத்தில் பிரதேச சபை தலைவர் இருக்கின்றார் அவர் எந்தளவு கல்வி மட்டம் என்று தெரியும். தற்போதைய அரசாங்கத்தின் பிரதான கோசம் இலங்கை ஆசியாவிலேயே ஆச்சரியமிக்க நாடாக (புதுமை) ஆக்குவது. இலங்கையை அறிவின் கேந்திர நிலையமாக மாற்றுவது. மக்கள் அபிவிருத்தியின் உயர்நிலைமை பார்த்து ஆச்சரிய (புதுமை)மடைதல். அந்த மக்கள் அபிவிருத்தியில் கீழ் மட்டத்தில் இருப்பதை கண்டு வியப்படைந்து நிற்கின்றனர்.

கல்வித்துறைக்காக கூடுதலான நிதியை ஒதுக்கியிருக்கும் நாடு கியூபா குடியரசாகும். அது அரசாங்கத்தின் வருமானத்தில் 18.6 வீதத்தை ஒதுக்குகின்றது. உலகிலேயே சுகாதார வளத்தில் முன்னிலையில் இருப்பதும் கியூபாதான். முதலாளித்துவத்தின் கொடூர பெறுபேற்றை இந்நாட்டு மக்கள் அனுபவித்து கொண்டிருக்கின்ற நிலையில் கியூபா குடியரசு மக்கள் சமுதாய வெற்றியை அனுபவித்து கொண்டிருக்கின்றனர். பாடசாலைக்கு செல்லும் வயதுடைய தங்களுடைய பிள்ளைகளை பாடசாலைக்குள் சேர்த்துகொள்வதில் கியூபா நாட்டு மக்களுக்கு எவ்விதமான பிரச்சினையும் இல்லை.தங்களுடைய பிள்ளைகள் உயர்கல்வியை கற்பதற்காக உயர்தர பாடசாலைகளை தேடி பெற்றார்கள் வீதி வீதியாக சுற்றிதிரிய வேண்டியதில்லை.

நாசா நிறுவனம் கம்பீரமாக செவ்வாய் கிரகத்திற்கு அனுப்பிய விண்கலத்தை கண்ணுற்ற மக்கள் புதுமையடைந்தனர். அந்த மக்கள் அரசாங்கத்தினால் கௌரவமாக அழைத்துவரப்பட்ட சுவாசிலாந்து அரசாங்கத்தின் மன்னரை கண்டும் புதுமையடைந்தனர். அந்நாட்டில் இருக்கின்ற புதுமையான கலாசாரத்தை கண்டே மக்கள் புதுமையடைந்தனர். எங்களுடைய நாட்டில் பெண்களின் கண்ணித்தன்மையை திருமண நாளன்று அவருடைய கணவரே பார்ப்பார். பலவந்தமாக அல்ல அப்பெண்ணை தன்னுடைய மனைவியாக ஏற்றுக்கொண்டதன் பின்னரே அதனை பரிசோதிப்பார். அப்படி இருக்கையில் சுவாசிலாந்தில் 10 வயதிற்கு மேற்பட்ட பெண்களை நிர்வாணமாக்கி வரிசையாக நிறுத்திவைத்து மன்னரினால் பெண்களின் கண்ணித்தன்மை பரிசோதிக்கப்படுகின்றது. அதுவும் சுவாஸிலாந்து மன்னரே அப்பெண்ணை மனைவியை ஏற்றுக்கொள்கின்றார் .கலாசாரத்தில் வளர்ச்சியடைந்த சமுதாயத்தை கொண்டிருக்கின்ற எமது மக்களிடத்தில் இது புதுமையான சம்பிரதாயமாகவே இருந்தது. 100 பெண் துஸ்பிரயோகங்களை மேற்கொண்டு அதனை கொண்டாடிய அக்மீமன பிரதேச சபையின் தற்போதைய தலைவர் மற்றுமொரு பெண்ணை து்பிரயோகத்திற்கு உட்படுத்தியமையினால் அவர் தற்போது கைதுசெய்யப்பட்டுள்ளார். 99 துஸ்பிரயோக சம்பவங்கள் அரசியல் பலத்தினால் மூடிமறைக்கப்பட்டதை கண்டு மக்கள் புதுமையடைந்தனர். ஜனாதிபதி குடும்பத்திற்கு நெருக்கமான இன்னொரு பிரதேச சபையின் தலைவர் தன்னுடைய நண்பர்கள் குழுவுடன் பெண்ணொருவரை துஸ்பிரயோகத்திற்கு உட்படுத்தியதை கண்ணுற்ற மக்கள் புதுமையடைந்தனர். அனார்கலியின் பிறந்த நாளன்று நாட்டின் உயர்மட்ட பிரஜை 75 இலட்சம் ரூபாவை செலவழித்ததை கண்டு மக்கள் புதுமையடைந்தனர். இவ்வளவு பெருந்தொகையை நமது வாழ்நாள் முழுவதிலும் செலவழிக்க முடியவில்லையே என்று கேள்வியெழுப்பினர். அரசாங்கத்தின் அனுசரனையிலேயே நூதனசாலையில் பெறுமதியான பொருட்கள் கொள்ளையடிக்கப்பட்டுள்ளது என்பதனை கண்டும் மக்கள் புதுமையடைந்தனர். நாட்டின் சிரேஸ்ட அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர் ஒருவர் வெளிநாட்டிற்கு செல்கையில் ஹோட்டலில் மேல் மாடியில் இருந்து கீழேவிழுந்ததை கண்ட மக்கள் புதுமையடைந்தனர். அவ்வாறான ஸ்ரீலங்கா ஆசியாவில் புதுமையாக இருக்கின்றது.

இலங்கையை ஆசியாவின் அறிவுக் கேந்திரமாக மாற்றுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. அதற்காக மொத்த தேசிய வருமானத்தில் 1.86 வீதமே ஒதுக்கப்பட்டுள்ளது. அறிவின் கேந்திரமல்லாத சார்க் வலயத்தின் ஏனைய நாடுகள் கல்விக்காக தேசிய வருமானத்தில் கீழ் கண்டவாறு ஒதுக்கியுள்ளன. இந்தியா 4.0, பாகிஸ்தான் 3.4, நேபாளம் 3.4 , பூட்டான் 5.2, பங்களாஸே் 2.4, மாலைத்தீவு 8.9, ஆசியாவிலேயே கல்வித்துறையில் தற்போது இலங்கை ஒதுக்குவது 1.86 வீதமாகும். இதனை கண்டும் மக்கள் புதுமையடைந்துள்ளனர்.

ஆரோக்கியத்தில் முக்கிய இடத்தை கொண்டிருந்தாலும் சுகாதார நடவடிக்கைகளுக்கான அரசாங்கத்தின் அனுசரனையை கண்டு சந்தோஷமடைய முடியாது. கல்வித்துறைக்காக கூடுதலான நிதியை ஒதுக்கியிருக்கும் நாடு கியூபா குடியரசாகும். அது அரசாங்கத்தின் வருமானத்தில் 18.6 வீதத்தை ஒதுக்குகின்றது. உலகிலேயே சுகாதார வளத்தில் முன்னிலையில் இருப்பதும் கியூபாதான். முதலாளித்துவத்தின் கொடூர பெறுபேற்றை இந்நாட்டு மக்கள் அனுபவித்து கொண்டிருக்கின்ற நிலையில் கியூபா குடியரசு மக்கள் சமுதாய வெற்றியை அனுபவித்து கொண்டிருக்கின்றனர். பாடசாலைக்கு செல்லும் வயதுடைய தங்களுடைய பிள்ளைகளை பாடசாலைக்குள் சேர்த்துகொள்வதில் கியூபா நாட்டு மக்களுக்கு எவ்விதமான பிரச்சினையும் இல்லை.தங்களுடைய பிள்ளைகள் உயர்கல்வியை கற்பதற்காக உயர்தர பாடசாலைகளை தேடி பெற்றார்கள் வீதி வீதியாக சுற்றிதிரிய வேண்டியதில்லை. அந்த பொறுப்பை கியூபா குடியரசு பொறுப்பேற்றுக் கொண்டுள்ளது. நோய்வாய் படுகின்ற ஒருவர் தனியார் வைத்தியசாலைகளிலும் அரச வைத்தியசாலைகளிலும் வரிசை யாக நீண்டநேரம் கால்கடுக்க நிற்கவேண்டிய தேவையில்லை. கியூபா மக்கள் தொகையில் ஒவ்வொரு 186 பேருக்கும் விசேட வைத்தியர் ஒருவர் இருக்கின்றார். மக்களின் சுகாதார பிரச்சினையை கியூபா குடியரசு பொறுப்பேற்று கொண்டுள்ளது. கியூபா குடியரசிற்குள் அரசியல் வாதியினால் சிறுபிள்ளைகள் து்பிரயோகத்திற்கு உட்படுத்தப்படுவதில்லை. அந்த நாட்டு மக்களை கியூபா அரசாங்கம் நுளம்புகளிடமிருந்தும் காப்பாற்றியுள்ளது. ஆனால் இலங்கை மக்களோ நுளம்பு கடிக்கு இலக்காகி ஒவ்வொரு நாளும் மடிந்துகொண்டிருக்கின்றனர்.

தற்போது முன்னெடுக்கப்படுகின்ற சமுக பொருளாதார முறைமையினால் எங்களுடைய நாட்டில் சகல துறைகளிலும் கடுமையான வீழ்ச்சிகள் ஏற்பட்டுள்ளன. போக்குவரத்து சீர்குலைந்துள்ளது. உண்மையாகவே பிரச்சினையை உருவாக்குகின்றவர்களை அடையாளம் கண்டுக்கொள்ளாத மக்கள் ரயில் நிலைய பொறுப்பதிகாரி அல்லது நடத்துனரை தங்களுடைய எதிரியாகவே மக்கள் பார்க்கின்றனர். அதுமட்டுமன்றி கல்வ்த்துறையில் முதலாளித்துவத்தின் தேவையை இனங்கண்டுகொள்ளாத மக்கள் அதிபர்களையும் தங்களுடைய எதிரியாகவே காண்கின்றனர். சுகாதார துறை சீர்குலைந்துள்ளது இதனை செய்தது முதலாளித்துவம் என்பதனை இனங்கண்டுக் கொள்ளாத மக்கள் தங்களுடைய எதிரியாக சுகாதார துறையைச்சேர்ந்த சேவையாளர்களையே காணுகின்றனர்.

பெற்றோர்கள் இல்லாவிடினும் சிறுமியர் தனியாக வீதியில் செல்வதற்கான உரிமை, திறமை இருக்கவேண்டும். சிறு பிள்ளைகளை துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்துவது முதலாளித்துவம் என்பதல்ல பிள்ளைகளை முறையாக கண்காணிக்காத பெற்றோர்கள் என்று ஜனாதிபதி அன்மையில் தெரிவித்திருந்தார். சிறுவர் துஷ்பிரயோகங்களின் குற்றவாளிகளை ஆடம்பரமான தந்தை மோசடி முதலாளித்துவத்தை இவ்வாறே காப்பாற்றுகின்றார்.

உயர்தர பரீட்சையை நடத்துவதற்கு மட்டுமின்றி புலமைப்பரிசில் பரீட்சையை நடத்தமுடியாத வகையில் எங்களுடைய நாட்டின் முதலாளித்துவ நிர்வாகம் இருக்கின்றது. முதலாளித்துவத்தின் இவ்வாறான செயற்பாடுகளுக்கு பலமான எதிரணி ஒன்று இல்லாமையே பிரதான காரணமாகும் என்று சிலர் கூறுகின்றனர். உண்மையான எதிரணி நீலநிற முதலாளித்துவத்துக்கு எதிரான பச்சை நிற முதலாளித்துவம் அல்ல. முதலாளித்துவ கட்சியின் கொள்கை முதலாளித்துவம் என்றால் எதிரணியின் கொள்கை சோஷலிச கொள்கையாகும். முதலாளித்துவ கட்சி கொள்கையினால் பாதிக்கப்பட்டுள்ள மக்களை சோஷலிச கொள்கையில்லாத எதிரணி கொள்கைதான் காரணம் என்றென்னினால் அது வெட்கப்பட வேண்டிய விடயமாகும். 64 வருட நீலம் மற்றும் பச்சை நிற ஆட்சிகளினால் துன்பப்படுகின்ற மக்களை மீட்டெடுத்து அவர்கள் சோஷலிஸ வெளிச்சத்தை காணவேண்டுமாயின் மக்கள் விடுதலை முன்னணியை பலப்படுத்தி அவர்களை முன்னணிலைக்கு கொண்டுசெல்லவேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




ஊழியர்கள் பெறும் வாழ்க்கை செலவுக்கொடுப்பனவு, மானியம், மேலதிக கொடுப்பனவு, சம்பள நிர்ணய சட்டத்தினூடான சம்பள உயர்வு, வீட்டு உரிமை, காணி உரிமை, அத்துடன் சமூக அந்தஸ்த்து எவையையும் அவர்கள் அனுபவித்ததில்லை. கிடைப்பதும் இல்லை. அதற்கான காரணத்தின் ஓர் அச்சாணிதான் மாதச்சம்பளமாகும். அதை பெற்றுக்கொடுப்பதற்கு போதுமான அவகாசம் ஐக்கிய தேசிய கட்சிக்கு இருந்த போதும் அவர்களின் 17 வருட ஆட்சி காலத்தில் அது

வழங்கப்படுகிறது. ஆனால் தோட்டத் தொழிலாளர்களின் வாழ்வில் அவர்களுக்கு ஒரு தீப்பெட்டிக்கூட கிடைப்பதில்லை. மாதசம்பளம்பெறும் அரச, தனியார் ஊழியர்களின் வாழ்க்கைத்தரம் பொதுவாக உயர்ந்த நிலையில் காணப்படுகிறது. காரணம் பொருளாதார நிலைமையில் ஒரு சிறிய மாற்றம் உள்ளது. ஆனால் தோட்டத் தொழிலாளர்களின் வாழ்வில் அவ்வாறானதோர் மாற்றம் ஏற்படுவதற்கான எந்த ஒரு சமிஞ்சையும் தென்படுவதில்லை. அதன் அடிப்படையில் தோட்டத் தொழிலாளர்களின் பிள்ளைகளின் கல்வி நிலை, சுகாதாரம், போசாக்கு என்பன

தமது குடும்பங்களுக்கும் தோட்டங்களை விலைக்கு வாங்கிக்கொள்வதற்கும் ஏதுவாக அமைத்துக்கொள்வதற்கும், அத்துடன் நில்லாமல் கூட்டு உடன்படிக்கை என்ற மாயவித்தையூடாக இரண்டு வருடத்திற்கொருமுறை கம்பனிகளிடம் இருந்து பல இலட்சக்கணக்கான ரூபாய்களையும் கறந்தும் கொள்கின்றார்கள். அதன் அடிப்படையில் இருந்து தொழிற்சங்கங்கள் செயற்படுவதால் தோட்டத்தொழிலாளர்களுக்கு மாதச்சம்பளத்தை பெற்றுக்கொள்ள முடியாத நிலை தோன்றியுள்ளது. இதற்கெதிராக தொழிலாளர்கள் அணிதிரள வேண்டும். அவ்வாறான

# தோட்டத் தொழிலாளர்களுக்கு மாதச்சம்பளம் வழங்க வேண்டும்




180வருடகால வரலாற்றைக் கொண்ட மலையகத் தோட்டத் தொழிலாளர்களுக்கு மாதச்சம்பளம் வழங்க வேண்டுமென அகில இலங்கை தோட்டத் தொழிலாளர் சங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளது. வரலாறு முழுவதும் கொத்தடிமைகளாக இருந்து நாட்கூலிகளாக சுரண்டப்பட்டுக்கொண்டு இருக்கிறார்கள் உழைப்பசைச்சுரண்டும் ஆளும் வர்க்கமும். அதற்கு முண்டுக்கொடுத்து அரசியல் பிழைப்பு நடாத்தும் தொழிற்சங்கங்கள் தோட்டத் தொழிலாளர்களின் மாதச்சம்பளம் விடயத்தில் மட்டும் மௌனவிரதம் அனுஸ்டிப்பது ஏன்? இந்நாட்டின் தேசி ய வருவாயில் 25% ஈட்டித் தருவது பெருந்தோட்டத்துறையாகும் அதாவது தோட்டத் தொழிலாளர்களாகும். அவ்வாறான தோட்டத் தொழிலாளர்கள் இன்று வரையும் நாட்கூலிகளாக இருப்பது கவலைக்குரிய விடயம் மட்டுமல்லாது அவர்களுக்கு மாத்திரம் மாதச்சம்பளம் வழங்குவதில் என்ன பிரச்சினை? அவர்கள் இந்நாட்டின் வளர்ச்சிக்காக தமது வியர்வை, உழைப்பை மட்டுமல்லாது தமது எலும்புக்கூடுகளையும் உரமாக்கியவர்கள் நாலு பரம்பரைகள் தேயிலைக்கு உரமாக்கப்பட்டுள்ளனர். அவ்வாறான சமூகம் ஏனைய சமூகங்கள் அனுபவிக்கும் சலுகைகள் மற்றும் உரிமைகளைக்கூட அனுபவிக்க முடியாத நிலையில் இருக்கின்றது. காரணம் நாட்கூலிகள் என்பதால் அவர்களை எந்தப்பிரிவினருடன் இணைப்பது. தனியார்த்துறையினருடனா? அல்லது அரசாங்கம் பொறுப்பேற்று தோட்டங்களை நிர்வாகித்தப்போது அரச ஊழியர்களாகவா? இவை இரண்டு பக்கமும் சேர்க்கப்படாமல் உள்ளனர். அதாவது நாட்கூலிகள் என்ற நிலையில். அரச ஊழியர்கள் மற்றும் தனியார்

நடைபெறவில்லை. ஏனென்றால் ஐக்கிய தேசிய கட்சிக்கு தோட்டத் தொழிலாளர்களுக்கு மாதச்சம்பளம் பெற்றுக்கொடுப்பதற்கு பதில் தோட்டங்களை தனியாருக்கு விற்பதிலேயே பெரும் குறியாக இருந்தனர்.அதன் பிரதிபலனாகவே 1992ம் ஆண்டு அப்போதைய அரசின் பங்காளியாக இருந்த இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் அனுசரனையுடன் விற்பதற்கான நடவடிக்கைகளை எடுத்தது. ஆகவே முதலாளிகளை போசிக்கும் ஐக்கிய தேசிய கட்சிக்கும் அதில் அங்கம் வகித்த கைக்கூலி தொழிற்சங்கங்களுக்கும் தோட்டத் தொழிலாளர்களுக்கு மாதச்சம்பளம் வழங்க வேண்டும் என்ற தேவை இருக்கவில்லை. இன்று அரச ஊழியர்கள், தனியார் துறை ஊழியர்கள் தமது மாதாந்த சம்பளத்தை உயரும் வாழ்க்கை செலவுக்கேற்ப உயர்த்துவதற்கான போராட்டத்தை ஆரம்பித்திருக்கும்போது அதன் அடிப்படையில் அவர்களுக்கான சம்பளமும் சம்பள நிர்ணய சபையூடாக உயர்த்தவும் படுகிறது. அத்துடன் நிவாரணம், மானியம் போன்றவைகள்

கீழ் மட்டத்திலேயே காணப்படுகிறது. அதன் காரணமாகவே இந்த நாட்டின் தேசிய பிரஜையாக கணிக்கப்பட வேண்டியவர்கள் இரண்டாந்தர பிரஜையாகவே கணிக்கப்படுகின்றார்கள். தோட்டத் தொழிலாளர்களின் வாழ்வில் மாற்றம் ஏற்பட வேண்டுமாயின் ஏனைய சமூகத்துடன் அவர்கள் தலைநிமிர்ந்து வாழ வேண்டுமாயின் . சமூக அந்தஸ்த்து மற்றும் வாழ்வு நிலை மேலோங்க வேண்டுமாயின் அவர்களுக்கு மாதச்சம்பளம் பெற்றுக்கொடுக்க வேண்டும். அதற்க்கிடையில் அரசாங்கத்தின் அணைப்பில் இருக்கும் தொழிற்சங்கம் மற்றும் ஐக்கிய தேசிய கட்சியின் அணைப்பில இருக்கும் தொழிற்சங்கங்கள் தோட்டத் தொழிலாளர்களுக்கு நாட்சம்பளம் வழங்க வேண்டும் என்ற பெரும் திட்டத்தோடு செயற்படுகின்றன அதாவது சந்தாவையும் அவர்கள் கூட்டிக்கொள்கிறார்கள். தொழிலாளர்கள் பெறும் நாட்சம்பளத்தில் 65%,75% என்று கூட்டிக்கொள்கின்றார்கள். தனியாருக்கு தோட்டங்கள் விற்கப்படுவதால் தமது சகாக்களுக்கும்,

சந்தர்ப்பத்தில்தான் தொழிலாளர்களின் எதிர்கால சந்ததியினரின் வாழ்வு ஒளிமயமானதாக அமையும்.

**கூட்டணி அமைக்கும் துடிப்பில் மலையக கட்சிகள்**

கடந்த மாகாண- சபை தேர்தலின் போது என்றும் இல்லாதவாறு வாய்ச்சவடாலும், வீராப்பும் பேசி நான்முந்தி நீ முந்தி என்று துள்ளிக்குதித்த மலையக தொழிற்சங்கங்கள் சப்ரகமுவ மாகாணத்தில் தோளில் தொங்கி ஒன்றாக இணைந்து தங்களின் போலி ஒற்றுமையை உலகுக்கு காட்டி வெற்றியும் பெற்றனர். இதனை சிலர் சாதனை என்றும் வேறு சிலர் சோதனை என்றும் போற்றிக்கொள்கின்றனர். ஆனால் அரசியல் ரீதியாக சிந்திக்கும் போது இன்று மலையகத்தின் அனைத்து தமிழ் கட்சிகளும் மகிந்தரின் காலடியில் கிடக்கின்றன. அவற்றை மகிந்தரின் சொற்படி நடக்காவிட்டால் பலவிதமான பாதகங்கள் ஏற்படும் என்றபயத்துடனும், தமக்கு கிடைக்கும் மறைமுகமான சலுகைகள் இல்லாது போகும் என்ற அச்சத்துடனும் மகிந்தரின் சொற்கேட்டு ஓரங்க நாடகம் நடித்தன. மகிந்தரின் கரத்தை பலப்படுத்தவும் அவரின் அதிகாரத்தை தக்க வைக்கவுமே அவைகள் படாதபாடு பட்டன. அது ஒரு போதும் மலையக மக்களுக்காக அல்ல. தோட்டத் தொழிலாளர்களின் தலைவர்கள் எனக் கூறிவருபவர்கள் பெரும்பாலானோர் அரசாங்கத்தின் அடியாட்களே. அவர்கள் மீண்டும் கூட்டணி, கூட்டணி என்று கூறுவது மலையக மக்களை ஏமாற்றவேயன்றி வேறெதற்கும் அல்ல. கூட்டணி என்பது மகிந்தவை பாதுகாக்கும் ஒரு மாயை ஆகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்த மண்ணில் மனித உரிமைகளை பாதுகாப்பதற்கு, உண்மையாகவே தேசிய ஒற்றுமையை கட்டியெழுப்புவதற்கான செயற்பாடுகளை முன்னெடுத்தாக வேண்டும்

**30வருடகால யுத்தத்தின் பின்னர் இலங்கை தற்போது முகம் கொடுக்கும் இக்கட்டான நிலைமைகளின் முன்னாள் வெளிநாட்டு பிரதிநிதிகள் பலரும் வந்து போவதன் பின்னணி தொடர்பாக மக்கள் விடுதலை முன்னணியின் பிரச்சார செயலாளர் தோழர் விஜித ஹேரத் பாராளுமன்றத்தில் ஆற்றிய உரை**

கௌரவ தலைவர் அவர்களே, தற்போது எம்மால் காணவும் கேட்கவும் கூடியதாகயிருப்பது - ஜப்பானின் இலங்கைக்கான விசேட பிரதிநிதி யசூசி அகாசி 22 வது தடவையாக இலங்கைக்கு வரவுள்ளார் என்பதாகும். கடந்த சில நாட்களுக்கு முன்னர் தென்னாபிரிக்க பிரதிநிதி இப்ராஹிம் அவர்கள் இலங்கைக்கு வந்து பேச்சு நடத்தியுள்ளார். அதேவேளை இந்தியாவில் கருணாநிதி டெசொ மாநாட்டை நடத்தி அதன் மூலமாக அழுத்தங்களை பிரயோகித்துள்ளார். இந்நிலைமைகளுக்கு மத்தியில் ஐக்கி நாடுகள் சபையின் மனித உரிமை ஆணையாளர் நவநீதம்பிள்ளை

**இன்று மத சுதந்திரத்தை பறித்து கலாசார ஆக்கிரமிப்பை மேற்கொள்வதற்கு நடவடிக்கைகளை முன்னெடுப்பீர்களானால், அரசு மக்களுக்கு சொந்தமான பல்லாயிரக் கணக்கான ஏக்கர் காணிகளை சுவீகரிக்குமானால், வடக்கில் வாழ் மக்கள், மன்னாரில் வசிக்கும் மக்கள், கிழக்கு மக்கள் வாழந்து வந்த தனிபட்ட காணி உரிமைகளை அவர்களுக்கு பெற்றுக் கொடுக்காது, அவைகளை அரசாங்கம் பலவந்தமாக கைபற்றுமானால், அவ்விடத்தில் மீண்டும் இனவாதம் தலையெடுப்பது தவிர்க்க முடியாது. மன்னார் நீதிமன்ற சம்பவத்தின் ஆரம்பம் எங்கிருக்கிறது? அது காணி இல்லாத காணி பறிபோன பிரச்சினையாகும். ஏன் அந்த காணிப் பிரச்சினை இவ்வளவு பூதாகரமாக உருவெடுதிருக்கிறது? இன்று மன்னாரில் பிரச்சினைக்குரிய பிரதேசங்களின் பெரும் தொகையான காணிகளை அரசாங்கம் சுவீகரித்துள்ளது. அதனால் முஸ்லிம் மக்களின் காணிகள், தமிழ் மக்களின் காணிகள், அரசாங்கம் சுவீகரித்துக் கொண்டதன் பின்னர் அம்மக்கள் சிறு துண்டு காணிகளுக்காக ஒருவரை ஒருவர் கொல்லுகின்ற நிலை ஏற்படுகிறது. அதன் அடிப்படையில் தான் நீதிமன்றம் சரியான தீர்ப்பு வழங்குகிறது. அதனை அடிப்படையாக கொண்டே அமைச்சர் நீதிமன்றத்திற்கு அச்சுறுத்தல் விடுக்கிறார். ஆகவே இதன் மூல ஊற்றாக அமைந்திருப்பது காணிக் கொள்ளையாகும். தெற்கில் இடம்பெறுகின்ற காணிக் கொள்ளை இன்று கண்முண்ணே தெரிகிறது. கொழும்பு வத்தளை மாபோலையில் இடம்பெறுகின்ற காணி கொள்ளை, காணிகளை நிரப்புதல் அவைகளை பலவந்தமாக அபகரித்தல் போன்றவற்றை எம்மால் காண கூடியதாயிருக்கிறது.**


இலங்கைக்கு வரவுள்ளார், இப்படியான நிலமை தோன்றியிருப்பதேன்? தற்போது அரசாங்கம் கடந்த காலத்தை மறந்துவிடுகள் என்று கூறுகிறது. கௌரவ வெளிநாட்டமைச்சர் **Forget about the Past** என்று கூறியுள்ளார். ஆனால் கடந்த



காலத்தை மறந்துவிடுங்கள் என்று கூறுவதைப் போலவே அரசாங்கமும் அதை நடைமுறையில் நிருபித்துக் காட்ட வேண்டும். அந்த பொறுப்பு அரசாங்கத்திற்கு இருக்கிறது. 2009 மே 19 ம் திகதி யுத்தம் முடிவடைந்தபோது நமது நாட்டில் தோன்றிய புதிய நிலமைகளின் அடிப்படையில் புதிதாக சிந்திப்பதற்கு, புதிதாக செயற்படுவதற்கு இனவாதத்திற்கு முடிவுகட்டி, இன ஐக்கியத்துடன் வாழும் சூழலை உருவாக்க வேண்டிய கடமைப் பொறுப்பு இந்த அரசாங்கத்திற்கு இருந்தது. சபைக்கு தலைமைதாங்கும் உறுப்பினர் அவர்களே, இன்று நடைபெறுவதென்ன? சர்வதேச தலையீடுகள், யசூசி அகாசி போன்றவர்கள் மீண்டும் வர நேரிட்டிருப்பதேன்? நமது நாட்டில் 22 வருடகால யுத்தத்தின் பின்னர் சமூகத்தில் உருவாக்கப்பட்டிருக்க வேண்டிய நல்லிணக்கச் செயற்பாடுகள், அறிக்கைகளுக்கும், வார்த்தைகளுக்கும் மட்டும் வரையறுக்கப்பட்டிருப்பதேன்? இன்று அமைச்சர் கஜதீர அவர்கள் எவ்வளவு ஆவேசமாக பேசினாலும், யதார்த்த நிலையை புரிந்து கொள்ளும்படி அவர் கேட்டாலும், உண்மையில் யதார்தத்தை புரிந்து கொள்ளும்படி மீண்டும்., மீண்டும் அரசாங்க அமைச்சர்களுக்கு தான் கூறவேண்டியிருக்கிறது. இன்று இந்த மண்ணில் நடப்பவற்றைப் பாருங்கள். ஐக்கிய நாடுகள் சபைக்கு சமர்ப்பிப்பதற்கு நாம் அறிக்கைகளை தயாரிக்கின்றோம். **LLRC** ஆணைக்குழு அறிக்கையை தயாரித்தோம். அவைகளை நடைமுறைப்படுத்தும்படி மீள நாம் செயற்திட்டங்களை வகுக்கின்றோம். அவைகளை சுமந்துக் கொண்டு ஜீ எல் பீரிஸ் அமெரிக்காவுக்கு சென்று அவைகளை ஹிலாரி கிளின்டன் அம்மையாரிடம் ஒப்படைக்கிறார். அதாவது அறிக்கைக்கு மேல் அறிக்கைகள் தயாரிக்கப்படுகின்றன. இன்று எதை பேசினாலும் அறிக்கைகள் தயாரிக்கப்படுகின்றனவே தவிர நடைமுறையில் எதுவும் கிடையாது. ஆனால் இந்த பூமியில் யுத்தத்தின் பின்னர் இடம்பெற்றிருக்க வேண்டிய உண்மையான மாற்றங்கள் எவையுமே நடைபெறவில்லை. அப்படியான மாற்றங்கள் நிகழ்ந்திருக்குமானால் கௌரவ சிறைச்சாலைகள் அமைச்சர் அவர்களே, வவுனியா சிறைச்சாலையில் நிமலரூபன், தில்ருக்ஸன் ஆகிய கைதிகள் படுகொலை செய்யப்பட்டிருக்க மாட்டார்கள். நீங்கள் நிதானமாக சிந்தித்துப் பாருங்கள். கம்யூனிஸ்ட் உறுப்பினராக சிந்தித்துப் பாருங்கள். ஏன் நிமலரூபன், தில்ருக்ஷன் போன்ற சிறைக் கைதிகளை ஏன் அந்த சிறைகளில் அடைத்து வைத்தீர்கள்? இவற்றிற்கு முன்னர் அச் சிறைசாயிலிருந்து கைதி ஒருவர் காணமல் போயுள்ளார். அவர் பற்றிய தகவல் எதுவுமில்லாமல் போய்விட்டது. அந்த சிறையிலிருந்து கொண்டுச் செல்லப்பட்ட கைதியின் மனைவியிடம், பெற்றோர்களிடம் அவரை ஒப்படைக்கும்படியே அவர்கள் முன்வைத்த கோரிக்கையாகும். கௌரவ உறுப்பினர் அவர்களே, சிறைக்கைதிகள் வெறுமனே உண்ணவிரதம் இருக்கவில்லை. அப்படி செய்யவும் மாட்டார்கள். சிறைகளில் இருந்தோருக்கு அது பற்றி நன்றாகத் தெரியும். நீங்களே சிந்தித்துப் பாருங்கள் 2002ல் அந்த ஜுலம்பிட்டியே அமரே தங்காலை சிறையில் இதே போன்றதொரு வேலையைச் செய்தார். அன்று அந்த பாதள கோஸ்டித் தலைவன் சிறை அதிகாரிகளை இவ்வாறே தடுத்த வைத்திருந்தான். சிறைச்சாலை அதிகாரிகள் அந்த கும்பலால் கைது செய்யப்பட்டிருந்தனர்.
அச்சந்தர்பத்தில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை என்ன? **STF** படையை அனுப்பி ஜுலம்பிட்டிய அமரேவை கொன்றீர்களா? அப்படிச் செய்யவில்லை. இதோ இவ்விடத்தில் தான் பாகுபாடு இருக்கிறது. உங்களுக்கோ, அல்லது கூருணர்வுள்ள அப்பனுக்கும் இது புரியாது. அந்த ஜுலம்பிட்டிய அமரே இரண்டு சிறை அதிகாரிகளை தடுத்து வைத்திருந்தபோது என்ன செய்தீர்கள், அந்த பாதாள தலைவனோடு பேச்சுவார்த்தை நடத்த அப்போதிருந்த எதிர்கட்சித் தலைவர் சென்றார். அங்கு **STF** சென்று அவர்களை தாக்கவில்லை. அங்கு கண்ணீர் புகை, தடியடி பிரயோகிக்கப்படவில்லை. சிறைக்கைதிகளை கொல்லவில்லை. ஆனால் வவுனியா சிறை சம்பவத்தின் போதும் அங்கும் அதுபோன்றதோரு நிகழ்வே இடமபெற்றது. வவுனியாவில் சிறைகைதிகளுக்கு ஏற்பட்ட நிலைமையின் காரணமாக அவர்கள் இரண்டு சிறை அதிகாரிகளை தடுத்து வைத்திருந்தனர். சிறைச்சாலைகளில் இது சாதாரண விடயமாகும். இவ்வாறான சம்பவங்கள் வெலிக்கடை சிறையிலும் இடம்பெறுகிறது. மஹர சிறையிலும் இடம்பெறுகிறது. அங்கு என்ன செய்தார்கள்? அமைச்சர் நிமால் சிரிபால டி சில்வா உறுதியளித்தார். ஒருமாத காலத்துக்குள், வவுனியாவில், அனுராதபுறத்தில் அவசர நடவடிக்கையாக், 4 நீதிமன்றங்களை அமைத்து அது தொடர்பான சட்ட நடவடிக்கைள் துரிதமாக முன்னெடுப்பதாக குறிப்பிட்டாகள். வளக்குகளை துரிதமாக முடிவுக்கு கொண்டு வருவதாக உறுதியளித்தார்கள். இவர்கள் உறுதியளித்தது எமக்கல்ல. நாட்டிற்கல்ல, உண்மையில் நடைமுறைபடுத்துவதற்கல்ல. அப்போது இந்தியாவிலிருந்து வந்த பிரதிநிகளுக்கு தெரிவதற்காக பொய்யான வாக்குறுதிகளை வழங்கினார். அதன் காரணமாக நடைபெற்றதென்ன? நீதிமனறங்கள் அமைக்கப்படவுமில்லை. இன்னமும் அமைக்கப்படவில்லை. இப்போது பல மாதங்கள் கடந்துள்ள நிலையில்தான் இறுதியாக நிமலரூபன் கொல்லப்பட்டார். 29 வயதுடைய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிமலரூபன் 2009ல் கைது செய்யப்பட்டார். தில்ருக்ஸன் வயது 39 வவுனியாவில் வைத்து 2009ல் கைது செய்யப்பட்டார். கௌரவ உறுப்பினர் அவர்களே, தில்ருக்ஸன் வயது 39 அந்த இளைஞன் பல்கலைகழகத்திற்கு கலை பிரிவுக்கு தெரிவாவதற்கு 3 புள்ளிகளே குறைவாக இருந்தது. அப்படியான ஒரு இளைஞனை கொன்றுவிட்டு இப்போது நீங்கள் என்ன செய்கிறிர்கள்? இன்று கருணா அம்மான்கள், பிள்ளையான்கள், கே.பி போன்ற தலைவர்களை செல்லப்பிள்ளைகளாக தாலாட்டி சுகபோகங்களை அனுபவிப்பதற்கு இடமளித்துவிட்டு, அந்த அப்பாவி இளைஞர்களை கொன்றுவிட்டு அவைகளை நியாயப்படுத்த போகிறிர்கள். இங்கு நீங்கள் கொன்றவாகள் யார்? கொன்றது வேறு யாரையுமல்ல. அரசியல் கைதிகளை பாதுகாக்கும் பொறுப்பு அரசாங்கத்துடையதாகும். அது அரசியலமைப்பில் அடிப்படைச் சட்டமாகும். அரசியலமைப்பின் 11ம் சரத்தில் கூறப்படுகிறது. மனித உரிமைகள் தொடர்பான 5ம் சரத்தில் கொடிய சித்திரவதைகள் மற்றும் உளரீதியான தாக்கங்களை ஏற்படுத்தக் கூடாது எனக் கூறுகிறது. சிறைகைதிகள் அனைவரும் மனிதர்கள் எனும் வாக்கியமும் இருக்கிறது. அதோ வெலிக்கடை சிறைச்சாலை மதிலில் எழுதப்பட்டிருக்கிறது. ஆனால் சிறைக்கைதிகள் அனைவரும் மனிதர்கள் என்பது வெறும் வார்த்தை மட்டுமேயாகும். நீங்கள் இவற்றை சாதாரண விடயமாக கருத வேண்டாம். நீங்கள் இங்கு படுகொலை செய்திருப்பது நிமலரூபன், தில்ருக்ஸன் போன்றவர்களை அல்ல. தமிழர்களின் பொது எண்ணங்களை கொன்றொழிக்கிறீர்கள். . பல்லாயிரக் கணக்கான தமிழர்களின் இதயங்களையே நீங்கள் புண்படுத்தியுள்ளீர்கள். இந்த படுகொலையின் விளைவை இன்னும் பல ஆண்டுகளுக்கு பின்னரே நாம் அனுபவிக்க வேண்டிவரும். அப்போது யசூசி அகாசிகள் 22வது தடவையாக அல்ல 100வது தடவயையாகவும் வருவார்கள். அப்போது தான் நவநீதம்பிள்ளைகள் மறுபடியும் வருவார்கள். அப்போதுதான் அமெரிக்க ஹிலாரி கிளின்டனிடம் அமைச்சர்கள் மண்டியிடும் நிலை தோன்றும். அப்போது தான் தென்னாபிரிக்காவின் இப்ராஹிமிடம் மண்டியிட நேரிடும் நிலை தோன்றும். கௌரவ அமைச்சர் அவர்களே, இதை சாதாரண விடயமாக கொள்ள வேண்டாம். இந்த சர்வதேச தலையீடுகள் வருவது, கருணாநிதி டெசோ மாநாட்டை கூட்டி இலங்கையில் தனிநாடு அமைப்பதற்கு வழி சமைப்போர் வேறு யாருமல்ல நீங்களேதான். நிமலரூபன், தில்ருக்ஸன் ஆகியோரை கொன்றது யாரென்று கண்டுபிடிக்க நீதியாமான விசாரணை நடத்தி அவர்களை கண்டுபிடித்து தண்டனை கொடுத்தீர்களா?. இல்லை நவநீதம்பிள்ளை நவம்பர் மாதம் வந்ததன் பின்னர் அவர் கூறுவார். இந்த படுகொலைகள் தொடர்பாக இலங்கை அரசாங்கம் சரியான முறையில் விசாரணை நடத்தி குற்றவாளிகளுக்கு தண்டனை வழங்கவில்லை என்று கூறுவார். 22வது மனித உரிமைகள் மாநாட்டில் மார்ச் மாத 2013ல் இதை கவனத்தில் எடுத்து புதிதாக குழுவொன்றை அமைத்து அந்த அறிக்கையினை சமர்ப்பித்து இலங்கைக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதற்கு காரணமாக அமையும். இவற்றை கொண்டு வருவது யார்? எனவே அமைச்சர் அவர்களே ஜெனிவா மாநாட்டில் நமது நாட்டிற்கு எதிராக பிரேரணைகளை கொண்டுவருவது வேறுயாருமல்ல. நீங்கள் செய்யும் அதர்மத்தின் காரணமாகவே நமது நாட்டிற்கு இந்த நிலைமை ஏற்படப்போகிறது. அன்று 1956ம் ஆண்டில் மக்கள் பிரதிநிதிகள் கோல்பேஸ் மைத்தானத்தில் வைத்து தாக்கப்பட்டனர். தரப்படுத்தல் கொண்டுவரப்பட்டபோது அதை கண்டித்து அமைதியாக நடத்தப்பட்ட ஆர்பாட்டத்தின் மீது தாக்குல் தொடுக்கப்பட்டது. கறுப்பு ஜூலை நிர்மாணிக்கப்பட்டது. அவற்றின் எதிர்விளைவுகளை தான் நாம் கடந்த முப்பது வருடங்களாக அனுபவித்தோம். இந்நாட்டின் மக்களே, இனபேதங்களுக்கப்பால் இவ்வாறான அநியாயங்கள் இனியும் இடம்பெற இடமளிக்க வேண்டாம். நீங்கள் அரசியல் கைதிகள் என்று ஏற்க மறுத்துள்ளீர்கள். கௌரவ வெளிநாடடமைச்சர் கூறுகிறார் **Forget about the past** என்று அப்படியானால் அந்த கடந்த காலத்தை மறக்க வேண்டுமானால் என்ன செய்ய வேண்டும். யுத்தம் முடிந்த பின்னர் தடுத்து வைக்கப்பட்டுள்ள அனைத்து அரசியல் கைதிகளையும் விடுதலை செய்தாக வேண்டும். கருணாவுக்கு, கே.பிகளுக்கு அமைச்சுப் பதவியும் சுகபோகத்தையும் பெற்றுக் கொடுக்க முடியுமென்றால், அந்த கிராமங்களில் இளைஞர்கள் இனவாதத்திற்கு, பிரிவினைவாத போராட்டத்திற்கு சென்றது தலைவர்களின் தவறினாலாகும். எனவே அனைத்து அரசியல் கைதிகளும் விடுதலை செய்யப்பட்டாக வேண்டும். **Forget about the past** என்பதன் அர்த்தம் அதுதான் நீங்கள் அதைச் செய்ய மாட்டீர்கள். சாதாரண கிராமங்களிலிருந்து வந்த இளைஞர்களை கொன்று கொடிய சித்திரவதைகளை செய்து, அன்று நடந்தவற்றை மீண்டும் செய்கிறிர்கள். இதன்மூலம் தேசிய நல்லிணக்கம் ஏற்படப்போவதில்லை. அமைச்சர் அவர்களே தேசிய நல்லிணக்கத்தை ஏற்படுத்த வேண்டுமென்றால் தயவு செய்து இந்த இரட்டைக் கொலையின் சூத்திரதாரிகள் யாரென்று பாராளுமன்றத்துக்கு காட்டுங்கள். அவை தொடர்பாக துரிதமாக விசாரணை நடத்துங்கள். அந்த விசாரணையின்படி அதற்கு பொறுப்பானவர்கள் யாரென்று அதாவது அவர் தமிழா, முஸ்லிமா, சிங்களமா, என்று பார்க்காதீர்கள். அவர்களை தண்டியுங்கள். தண்டித்து காட்டுங்கள் பார்க்கலாம். இவ்வாறானவற்றை ஒருபோதும் நாங்கள் அனுமதிக்க மாட்டோம். அவற்றுக்கு எதிராக நாங்கள் நடவடிக்கை எடுப்போம் என்று காட்டுங்கள். ஆனால் இன்னமும் நீங்கள் அவ்வாறான நடவடிக்கைளுக்கு நீங்கள் இறங்கவில்லை. அப்படியிருக்கும்போது எப்படி கடந்த காலத்தை மறந்து நல்லிணகக்த்துடன் செல்ல தயாரென்று? அது நடைமுறையும இல்லை. யதார்த்தமும் இல்லை. அடுத்தாக நான் உங்களது கவனத்திற்கு கொண்டுவர விரும்புவது காணிப் பிரச்சினையாகும். இது ஒரு பாரிய பிரச்சினையாகும். பலவந்தமாக காணிகளை அபகரித்தல், காணிகளை கைபற்றுவது போன்றவை இன்று வடக்கில் சாதாரண நிகழ்வாக மாறியுள்ளது. உதாரணங்ளோடு இங்குள்ள உறுப்பினர்கள் சுட்டிக்காட்டினார்கள். முன்னரும் கூறிவந்துள்ளார்கள். அவைகளை நீங்கள் பொருட்படுத்தாது நிராகரித்துள்ளீர்கள். ஆனால் இவைகள் சிறிது சிறிதாக பெருக்கமடைகிறது. இன்று மத சுதந்திரத்தை பறித்து கலாசார ஆக்கிரமிப்பை மேற்கொள்வதற்கு நடவடிக்கைகளை முன்னெடுப்பீர்களானால், அரசு மக்களுக்கு சொந்தமான பல்லாயிரக் கணக்கான ஏக்கர் காணிகளை சுவீகரிக்குமானால், வடக்கில் வாழ் மக்கள், மன்னாரில் வசிக்கும் மக்கள், கிழக்கு மக்கள் வாழ்ந்து வந்த தனிபட்ட காணி உரிமைகளை அவர்களுக்கு பெற்றுக் கொடுக்காது, அவைகளை அரசாங்கம் பலவந்தமாக கைபற்றுமானால், அவ்விடத்தில் மீண்டும் இனவாதம் தலையெடுப்பது தவிர்க்க முடியாது. மன்னார் நீதிமன்ற சம்பவத்தின் ஆரம்பம் எங்கிருக்கிறது? அது காணி இல்லாத காணி பறிபோன



பிரச்சினையாகும். ஏன் அந்த காணிப் பிரச்சினை இவ்வளவு பூதாகரமாக உருவெடுதிருக்கிறது? இன்று மன்னாரில் பிரச்சினைக்குரிய பிரதேசங்களின் பெரும் தொகையான காணிகளை அரசாங்கம் சுவீகரித்துள்ளது. அதனால் முஸ்லிம் மக்களின் காணிகள், தமிழ் மக்களின் காணிகள், அரசாங்கம் சுவீகரித்துக் கொண்டதன் பின்னர் அவர்கள் சிறு துண்டு காணிகளுக்காக ஒருவரை ஒருவர் கொல்லுகின்ற நிலை ஏற்படுகிறது. அதன் அடிப்படையில் தான் நீதிமன்றம் தீர்ப்பு வழங்குகிறது. அதனை அடிப்படையாக கொண்டே அமைச்சர் நீதிமன்றத்திற்கு அச்சுறுத்தல் விடுக்கிறார். ஆகவே இதன் மூல ஊற்றாக அமைந்திருப்பது காணிக் கொள்ளையாகும். தெற்கில் இடம்பெறுகின்ற காணிக் கொள்ளை இன்று கண்முண்ணே தெரிகிறது. கொழும்பு வத்தளை மாபோலையில் இடம்பெறுகின்ற காணி கொள்ளை, காணிகளை நிரப்புதல் அவைகளை பலவந்தமாக அபகரித்தல் போன்றவற்றை எம்மால் காண கூடியதாயிருக்கிறது. ஆகவே வடக்கில் அவர்களின் சொந்த இடங்களை அவர்களுக்கு கொடுக்க மறுத்து வருகிறது. பாதுகாப்பு செயலாளர் ஆகஸ்ட் மாதமாகும் போது மீள் குடியேற்ற நடவடிக்கைகள் முடிவுறுமெனறு குறிப்பிட்டிருந்தார். மீள்குடியேற்ற அமைச்சர் இந்த வருட இறுதிக்குள் மீள்குடியேற்றத்தை முடிவுக்கு கொண்டுவர எதிர்பார்க்கின்றோம் என்று கூறுகிறார். இன்று கஜதீர அவர்கள் இவ்விடத்தில் தொண்டை கிழிய கத்துகிறார் ஆனந்தபுரத்தில் 100 குடும்பங்களை குடியேற்றுகின்றோம் என்று கூறுகிறார். ஆனந்தபுரத்தில், தர்மபுரத்தில் சிங்கள, தமிழ், முஸ்லிம் மூவினமும் சேர்ந்து கிரிக்கட் மெச் ஒன்று விளையாடுவதற்கு இடமளிக்கவில்லை. கிரிக்கட் விளையாடும்போது இராணுவத்தினர் வந்து தடுத்தார்கள். அதனால் இந்த காணி பிரச்சினையானது அமைச்சர் அவர்களே, இன்று மன்னாரில் மட்டுமல்ல. எல்லா பகுதிகளிலும் உள்ள பிரச்சினையாகும். இந்த காணி பிரச்சினையின்போது காணியை அரசு சுவிகரித்தலானது, பலவந்தமாக அபகரித்தல் அதன் உரிமையாளர்களுக்கு பெற்றுக் கொடுக்காமையானது, அவைகள் கலாசார ஆக்கிரமிப்பாகும் அவைகள் தான் பின்னர் யுத்தமாக உருவெடுக்கிறது. வடக்கு இளைஞர்கள் மீண்டும் ஆயுதம் ஏந்தும் நிலைக்கு தள்ள வேண்டாம்.

அந்த போலியான LLRC அறிக்கையின் மூலம் பிரச்சினைகளுக்கு உரிய தீர்வு கிடைக்க போவதில்லை. உண்மையில் இந்த மண்ணில் மனித உரிமைகளை பாதுகாப்பதற்கு, உண்மையாகவே இந்த மண்ணில் தேசிய ஒற்றுமையை கட்யெழுப்புவதற்கு செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டும். அதனால் கௌரவ உறுப்பினர் அவர்களே, கடைசி நிமிடத்தில் நான் கூறுவதாவது, இந்த செயற்பாட்டுத் திட்டத்தை அமெரிக்காவிடம் கையளிக்கும்போது ஜெனிவாவுக்கு கொண்டுச் செல்ல முற்படும்போது இந்த பாராளுமன்றத்திற்கும் பொதுமக்கள் தெரிந்து கொள்வதற்கும், அவைகளை செயற்படுத்துவதெப்படி என்றும் நம் நாட்டு மக்களை தெளிவுபடுத்தாது நீங்கள் வெறுமனே அறிக்கைளை தயாரித்து சர்வதேசத்தை திருப்திபடுத்துவதற்காக கொண்டு செல்லும் போலி நடவடிக்கைகளினால் நீங்கள் மென்மேலும் நெருக்கடிக்குள்ளாவீர்கள். அந்த கஸ்டத்தில் மக்களும் விழுவார்கள். அதோ அங்கு தான் பிரச்சினை இருக்கிறது. இறுதியாக இந்நாட்டு மக்கள் தான் இவை அனைத்துக்கும் பதிலளித்தாக வேண்டும். இந்தப் பிரச்சினைகளுக்கு இரையாகிப்போவதும் இந்நாட்டு மக்களாகும். அந்த நிலைமையை தோற்றுவிக்காது இவைகளை அறிக்கைளுக்கு மட்டும் வரையறுக்காது மனித உரிமைகளை பாதுகாப்பதற்கு, மக்களின் காணி உரிமைகளைப் பாதுாப்பதற்கு, அதேபோல் அரசியல் கைதிகளை உடனடியாக விடுவிப்பதற்கு துரிதமாக நடவடிக்கை எடுத்தாக வேண்டும். அதேபோன்று நான் மீண்டும் வலியுறுத்துகின்றேன் நிமலரூபனை, தில்ருக்ஷனை கொலை செய்தவர்கள் தொடர்பாக பக்கச்சார்பற்ற விசாரணை நடத்தி குற்றவாளிகளுக்கு தண்டனை வழங்கி காட்டுங்கள். அதன் மூலமாக நாம் தேசிய ஒற்றுமையை கட்டியெழுப்ப தயார் என்று இந்நாட்டு மக்களுக்கு கூறுவதற்கும், தேசிய நல்லிணக்கத்தை நடைமுறையில் யதார்த்தமாக்க உண்மையான நடவடிக்கைளை எடுங்கள் என்று கேட்டுக் கொள்கிறேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிழக்கில் நேர்மையான ஆட்சியை எதிர்பார்க்க முடியாது

**மட்டக்களப்பில் மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் சோமவன்ச அமரசிங்க**



வடக்கு கிழக்கில் தமிழ் மக்களின் கா ணிகளை திட்டமிட்ட முறையில் அரசாங்கம் அபகரித்து வருவதுடன். தேர்தல் சட்டவிதிகளையும் படுமோசமாக மீறியுள்ளததோடு ஜனாதிபதி தேர்தலை விடவும் மும்மடங்கு பணத்தைவிரையம் செய்துள்ளதோடு மக்களின் மூலைகளையும்கூட கைதியாக்கி மிகச் சிறிய அளவிலான வெற்றியையே பெற்றுக்கொண்டது. அதுமட்டுமல்லாது ஒருவரை ஒருவர் ஏமாற்றும் தேர்தலாக அதை மாற்றியிருந்தது. குறிப்பாக முஸ்லிம் தலைவர்கள் முஸ்லிம் மக்களையும், தமிழ் தலைவர்கள் தமிழ் மக்களையும் ஏமாற்றும் ஒரு பரிதாப நிலைமைக்கு தளளப்பட்டனர் என கடந்து அக்டோபர் மாதம் 25ம் திகதி தேர்தல் முடிவடைந்ததுடன் கிழக்கு மாகாண மட்டக்களப்பு மாவட்டத்திற்கு விஜயமொன்றை மேற்கொண்டபோதே மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் தோழர் சோமவன்ச அமரசிங்க தெரிவித்ததர்.

கல்லடி, ஊரணி, ஏராவூர், பாலமுனை. ஆரையம்பதி, நாவற்குடா மக்களுடனான சந்திப்பை மேற்கொண்டு பேசுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இனவாதத்தை அடிப்படையாகக்கொண்டே கிழக்கு மாகாணசபை தேர்தல் முன்னெடுக்கப்பட்டன. மதவாதமும் முன்னெடுக்கப்பட்டன. பள்ளிவாசல்கள் நொறுக்கப்பட்டன இஸ்லாமியர்கள் பள்ளி வாசல்களை பாதுகாக்க அரசாங்கத்திற்கு எதிராக முஸ்லிம் காங்கிரஸாக்கு வாக்களித்தார்கள். அரசாங்கம் இந்தியாவில் இருந்து கொண்டுவரப்பட்ட புத்தபகவானின் புனித தந்தத்தை காட்சிப்படுத்தியது. தேர்தல் முடிந்த கையோடு புத்தபகவானின் புனிததந்தத்தை இந்தியாவுக்கு கொண்டு செல்லப்பட்டதுடன் பள்ளிவாசல்கள் நொறுக்கப்படுவதும் நிறுத்தப்பட்டது. மக்களை அரசியல் ரீதியாக சிந்திக்கவிடாது இனவாத மற்றும் மதவாத ரீதியாக சிந்திப்பதற்கான நடவடிக்கைகளை அரசாங்கம் முன்னெடுத்தது.

கடந்த காலத்தில் இனவாத அரசியலே முழு நாட்டினதும் ஒற்றுமையை சீர்குலைத்து பிரிவினைவாதம் உருவாகி தனிநாடென சென்று இறுதியல் யுத்தத்தில் இலட்சக்கணக்கான உயிர்களைக்காவு கொண்டது. இவ்வாறான நிலையில் இன ஐக்கியத்தை கட்டியெழுப்பு வேண்டிய அரசாங்கம் தற்போது இனவாதத்தை தூ ண்டிவிட்டுள்ளது. அது மட்டுமல்லாது தமிழ் மக்கள் குடியிருக்கும் பகுதிகளில் போதிமரங்கள், புத்தர் சிலைகளை வைத்த பிரிவினையை வளர்ப்பதற்கு ஏதுவான நடவடிக்கைகளை முன்னெடுக்கிறது. வடக்கு கிழக்கில் தமிழ் மக்களின் காணிகள் திட்டமிட்டப்படி அரசாங்கத்தால் அபகரிக்கப்படுகின்றன. இதனை தடுத்து நிறுத்த வேண்டுமாயின் வடக்கு கிழக்கில் வாழும் மக்கள் இதற்கெதிராக அணித்திரள வேண்டும். இன்று தமிழ் மக்களின் காணிகள் அபகரிக்கப்படுகின்ற நிலையில் நாளை அம்மக்களின் குடியிருப்புகள் அபகரிப்படும் என்பதில் எவ்விதமான ஆச்சரியமும் இல்லை. அதற்கு ஏதுவான சட்ட திருத்தங்களும் கொண்டுவரப்படலாம்.

கடந்த கிழக்கு மாகாணசபை தேர்தலில் அரசாங்கம் தேர்தல் சட்டங்கள் மற்றும் விதிமுறைகளுக்கு மாறாகவும் ஜனாதிபதி தேர்தலைவிட மூன்று மடங்கு பணத்தை செலவிட்டு ஆட்சியை கைப்பற்றியுள்ளது. இந்நிலையில் அங்கு நேர்மையான ஆட்சி ஏற்படும் என எதிர்ப்பார்க்க முடியாது

# இலவச கல்வி பாதுகாக்கப்படுமா?

கல்வியை சீர்குலைக்கும் நோக்கில் இன்று கல்வியமைச்சு முனைப்புக்காட்டிவருகிறது. இலவச கல்வியை சீர்குலைக்கும் திட்டத்திற்கு எதிராக பல்பலைகழக பேராசிரியர்ககள், பல்கலைகழக மாணவர்கள், அரசியல் தலைவர்கள் என பலரும் வீதிக்கு இற்ங்கி இலவச கல்விக்கு 6வீத விழுக்காட்டை ஒதுக்கி இலவச கல்வியை பாதுகாக்குமாறு அரசாங்கத்துக்கு அழுத்தம் கொடுத்து வருகின்றார்கள்.

அப்படியான நிலையில் தோட்டப்புறங்களில் உள்ள தமிழ் பாடசாலைகளில் அதாவது நவோதயா, சப்பிரி, ஆயிரம் பாடசாலை என பெயரிடப்பட்டுள்ள பாடசாலைகளில் பெற்றார் மற்றும் மாணவர்களின் கண்களில் மணலை தூவுகின்றார்கள். அதாவது பாடசாலை அபிவிருத்தி சங்க கூட்டத்தை நடாத்தி ஆசிரியர்கள் மற்றும் பாடசாலை அபிவிருத்தி சங்க உறுப்பினர்கள் பாடசாலைக்கு தேவைப்படும் பொருட்களை பெற்றார்களிடம் பெற்றுக்கொடுக்குமாறு வற்புறுத்துகின்றார்கள். மின்சார உபகரணங்கள். வர்ண பூச்சுகள், ஆணிகள், தரைவிரிப்புகள், சீமெந்து கதவுகள், யன்னல்கள் என பல்வேறு பொருட்களை பட்டியல் இட்டு காட்டுகின்றார்கள்.



கல்வி அதிகாரிகளும், கல்வி அமைச்சும் கூறும் இந்த ஏமாற்று மந்திரத்தை அதிபர், ஆசிரியர்கள் மனனஞ்செய்து பாடசாலை அபிவிருத்தி சங்கத்தினூடாக பொருட்களை பெற்றுக்கொடுக்கும்படி அறிவித்தல் விடுக்கின்றனர். அதற்கான சில சட்டத்திற்கு முரணான சுற்று நிருபங்களை கல்வி அதிகாரிகள் பாடசாலை அதிபர்களுக்கு அனுப்பி வைக்கின்றார்கள். இலவச கல்வியை சீர்குலைக்கும் நோக்கில் அரசாங்கம் செயற்படும்போது அந்த உண்மையை பெற்றார்களிடம் இவர்கள் கூற மறந்து விடுகின்றார்கள். கல்விக்கு ஒதுக்கவேண்டிய நிதியை அரசாங்கம் ஒதுக்காமையினாலேயே இந்நிலைமை தோற்றம் பெற்றுள்ளது என்பதை பெற்றார்கள் புரிந்துக் கொள்ளவேண்டும்.மொத்த தேசிய உற்பத்தியில் 30வீத விழுக்காட்டை அரசாங்கம் வீண் வரையம் செய்யும் போது கல்விக்கு ஒதுக்கவேண்டிய 6வீத விழுக்காட்டை ஏன் ஒதுக்க முடியாது எனபதை பெற்றர்கள் புரிந்துக்கொள்ள வேண்டும். உண்மையை மூடி பெற்றார்களின் தலையில் மேலும் சுமையை சுமத்தும் ஆசிரியர்கள், அதிபர்கள் இலவச கல்வியை பாதுகாக்க பெற்றோர்களை அரவணைத்துக்கொண்டு போராட அணித்திரள வேண்டும் . இல்லையேல் இலவச கல்விக்கு பதில் பெற்றோர்கள் வாங்கித்தரும் பொருட்களால் எஞ்சப்பபோவது வெறும் பாலடைந்த கட்டிடங்கள் மட்டுமேயாகும்.

## கறைகள்!

கறை படிந்த வரலாற்றில்
கவலைகள் ஏராளம்
அகதியாய்ப் போனோரில்
ஆற்றாமைகள் தாராளம்!

இருபத்தொரு வருடங்கள்
இதயத்துடிப்பு மறந்து
ஊரெண்ணியிருக்கிறார்கள்
ஆசைகளைத் துறந்து!

வடபுலத்து மக்களவர்
வெடவெடத்தல் மறக்கலாமோ?
இட நிலபுலன் யாவையும்
இழந்த சோகம் ஈடேறுமோ?

வயோதிபரும் நோயாளியும்
வருத்தத்துடன் நடைநடந்தே
தண்ணியின்றி தவித்தபோது
மனம் கொதித்த கதை கொடிது!
ஆடு கோழி மீன் என்றே
ஆக்கிச் சோறு தின்றவர்கள்
கஞ்சிக்கும் வழியின்றி
காய்ந்திருந்தர் அவனியிலே!

இன்றும்தான் அலறுகின்றார்
நடந்தவற்றை நிதம் எண்ணி
அவர்களுக்காய் விடியல் தர
எத் தலைவன் குரல் கொடுப்பான்?

ஒரே தேச மக்களென
எல்லோரையும் மதித்திங்கு
ஆதரிக்கும் ஒரு வீரன்
எங்கிருந்து முன்வருவான்

வெலிகம
ரிம்ஸா முகம்மத்




இல.198/19 கொழும்பு 10ல் வசிக்கும் ரில்வின் சில்வா ஆகிய என்னால் இல.43/43 வலவ... தெல்கந்த நுகேகொட சரளா அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org